(இ) ஆம் என்றால், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆக்ரா, ஜான்சி, நாகபுரி, ஹைதராபாத், பெங்களூர், கிருஷ்ணகிரி, சேலம், மதுரை, திருநெல்வேலி வழியாக கன்னியாகுமரி—டில்லியை இணைக்கும் தேசீய நெடுஞ்சாலை ஒன்று ஏற்கெனவே உள்ளது. தமிழ் நாட்டில் அமைந்துள்ள மேற்படி சாலையின் ஒரு பகுதி 7-வது தேசீய நெடுஞ்சாலையின் அதாவது காசி—கன்னியாகுமரி சாலையின் ஒரு பகுதியாகும்.

(இ) இவ் வினாவிற்கிடமில்லை.

DR. H. V. HANDE : Sir, in view of the fact that Kanyakumari has assumed greater tourist attraction especially after the installation of the statue of Swami Vivekananda on the rock there, will the State Government adopt a different approach? Also, when are the Government going to accomplish the task of improving the National Highway and making it a beautiful highway so that more people can travel and visit places of tourist importance?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : There is no question of changing the approach of the State Government. The Central Government should change their approach.

திருப்பூர் நகரில் பயணியர் விடுதி

*181. வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

திருப்பூர் நகரில் பொதுப்பணித்துறையில் பயணியர் விடுதி ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. சு. துரைசாமி : திருப்பூர் நகரில் ஏறத்தாழ 1½ லட்சம் மக்கள் இருக்கிறார்கள். திருப்பூர் ரயில் நிலையத்திலிருந்துதான் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை போன்ற இடங்களுக்குப் போக முடியும். அப்படிப்பட்ட அந்த இடத்தில் பொதுப்பணித் துறையினரின் பயணிகள் விடுதி இல்லாத காரணத்தால் அரசாங்க ஊழியர்களும், அமைச்சர்களும் அங்கு தங்குவதற்கு முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டிலேயே அங்கு ஒரு பயணிகள் விடுதியைக் கட்ட அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவது போல் திருப்பூரில் இருந்துதான் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டைக்குப் போக வேண்டுமென்ற அவசியமில்லை. கோவைக்குச் சென்று அங்கிருந்து சவுகரியமாகப் போக வசதி இருக்கிறது. இருந்தாலும் உறுப்பினர் அவர்களுடைய கேள்வியின் அடிப்படையில் அவருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.